# RentSafeTO:
## Apartment Building Standards Program

# வண்ணக் குறியீடிடப்பட்ட அடையாளங்கள்










ஜூன் 15, 2026 முதல், ரொறன்ரோ நகரம், கட்டிடப் பராமரிப்புத் தரநிலைகளைப் பிரதிபலிக்கும் வகையில், அடுக்குமாடிக் கட்டிடங்களுக்கு வண்ணக் குறியீட்டு அடையாளப் பலகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அறிவிப்புப் பலகைகள் கட்டிடத்தின் நுழைவாயிலிலிருந்து தெளிவாகத் தெரியும் இடத்தில் பொருத்தப்பட வேண்டும் மற்றும் கட்டிடத்தின் மதிப்பெண்ணைப் பிரதிபலிக்க வேண்டும்.

TORONTO

311

# RentSafeTO:
## Apartment Building Standards Program

# இந்த வண்ணங்களின் அர்த்தம் என்ன?

**பச்சை – திருப்திகரமானது**
இந்தக் கட்டிடம் நகரத்தின் பெரும்பாலான அல்லது அனைத்துப் பராமரிப்புத் தரநிலைகளையும் பூர்த்தி செய்கிறது மற்றும் மிகக் குறைவான அல்லது எந்த விதிமீறல்களும் இல்லை.

**மஞ்சள் – மேம்படுத்தப்பட வேண்டும்**
இந்தக் கட்டிடம் நகரத்தின் சில பராமரிப்புத் தரநிலைகளைப் பூர்த்தி செய்கிறது, மேலும் இதில் சில விதிமீறல்களும் இருக்கலாம்.

**சிவப்பு – குறிப்பிடத்தக்க மேம்பாடு தேவை**
இந்தக் கட்டிடம் நகரத்தின் மிகக் குறைந்த பராமரிப்புத் தரநிலைகளையே பூர்த்தி செய்கிறது, மேலும் இதில் பல விதிமீறல்கள் இருக்கலாம்.

**முக்கிய குறிப்புகள்:** ஒரு சிவப்பு அடையாளம் இருப்பதன் அர்த்தம், ஒரு கட்டிடம் பாதுகாப்பற்றது, குடியிருக்கத் தகுதியற்றது அல்லது மூடப்பட்டுள்ளது என்பதல்ல. நகரத்தின் சொத்துப் பராமரிப்புத் தரநிலைகளுக்கு இணங்க உரிமையாளர்களைக் கொண்டுவர, மாநகராட்சி அமுலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மேலும் தகவலுக்கு,
**toronto.ca/RentSafeTOSigns**
ஐப் பார்வையிடவும்.

TORONTO 3 1 1